# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2350 - 2023 සැප්තැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2023.09.15

*2350 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1854* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1857* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1851-B 82495-5,441 (2023/09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழிமூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் பதிவாளர் பதவி – யாழ்ப்பாணம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**– க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 22.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கானை | சங்கானை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலிகாமம் மேற்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். |

09-269

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழிமூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் பதிவாளர் பதவி – கிளிநொச்சி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 22.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கிளிநொச்சி | கண்டாவளை | பரந்தன் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கரச்சி பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி. |

09-270

---

## திருத்தம்

அரசாங்க சேவை ஆணைக்குழு

**1877/28 ஆம் இலக்க 2014.08.28 ஆந் திகதிய இலங்கை கட்டட நிர்மாண சேவைப் பிரமாணத்தின் பிரிவு 11.2 இன் கீழ் இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல்**

2023.09.08 ஆந் திகதிய இலக்கம் 2,349 இன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் மேற்படி தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு கீழ்வரும் திருத்தம் சேர்க்கப்பட்டுள்ளதோடு அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபன்தனைகள் மாற்றமேதுமின்றி நிலைக்கும்

04. புள்ளி வழங்கல் விதிகள்
இலக்கம் I இன் விடயங்கள் நீக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் இந்த திருத்தத்தின் காரணமாக மீண்டும் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளின் பிரகாரம்,

கே. டி. என். ரஞ்சித் அசோகா,
செயலாளர்,
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2023, செத்தெம்பர் 13.

09-335

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2016 (2023)

1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 08 ஆம் பந்தியின் கீழான ஏற்பாடுகளுக்கு அமைய மொழிபெயர்ப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2024, சனவரி மாதம் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் இப்பரீட்சைக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தோற்றுவதற்கு முடியும். பரீட்சை தொடர்பாக விண்ணப்பித்த மொழிமூலத்தினை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது. இவ் அறிவித்தலுக்கு அமைய குறித்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு அரசாங்க சேவையின் இணைந்த சேவைகளுக்கு உரிய அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அதற்குரிய விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "எங்கள் சேவை" (our service) இன் கீழ் உள்ள Online Application (E. B. Exams) என்ற இடைமுகத்தினூடாக வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரமே அனுப்ப முடியும். அலுவலர்கள் தாங்கள் தோற்றும் தடவைகளுக்கேற்ப உரிய இடைமுகத்தைத் தெரிவு செய்ய வேண்டும். விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை மூலமாக அனுப்பிய பின் அதனைத் தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியில் வேறு தகவல்கள், விண்ணப்பதாரரின் உறுதிப்படுத்தல், கையொப்பத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல் ஆகிய பகுதிகளை பூரணப்படுத்தி விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை – 2016 (2023) என்றவாறு தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். விணணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2023, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு :** இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு சமாந்தரமாக மாகாண அரசாங்க சேவையின் மொழிபெயர்ப்பாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள், குறித்த மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு மூலமும், ஏனைய குறித்த நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தொடர்பான ஏற்பாடுகள் அந்நிறுவனங்களின் மூலமும் வெளியிடப்படும்.

அந்தந்த மாகாண அரசாங்க சேவையின் அலுவலர்கள் மற்றும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற ஏனைய நிறுவனங்களின் அலுவலர்களது விண்ணப்பங்களை வேறு பிரித்துக் கொள்வதற்காக விண்ணப்பத்தின் தலைப்பில் குறித்த சேவை அல்லது நிறுவனம் பற்றிக் குறிப்பிடும் போது குறியீட்டு இலக்கமொன்று உள்ளடக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய **இணைந்த சேவைக்குரிய அலுவலர்களின் குறியீட்டு இலக்கம் 10 ஆகும்.**

02. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதி கட்டாயமாக தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறு அனுப்பும்போது தபாலில் தொலைதல் அல்லது தாமதமாதல் என்பன தொடர்பில் செய்யப்படும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தைத் தாமதிப்பதால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். (தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை தங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

03. பாடவிதானமும், பரீட்சை நடைமுறையும் –

**முதலாவது பாடம் - வினாத்தாள் இல. 01**

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தியிலிருந்து

(ii) (அ) உத்தியோகபூர்வ ஆவணமொன்றிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் மற்றும்

(ஆ) பத்திரிகையின் ஆக்கமொன்றிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகளை விண்ணப்பதாரர்கள் தனது மொழிபெயர்ப்பு மொழி மூலத்திற்கேற்றவாறு தெரிவு செய்யப்படும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்.

(i) சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு

(ii) சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு

(iii) தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு

100 புள்ளிகள் - 03 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள்

**இரண்டாம் பாடம் - வினாத்தாள் இல. 02**

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தி ; அத்துடன்

(ii) (அ) உத்தியோகபூர்வ ஆவணமொன்றிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் ; மற்றும்

(ஆ) பத்திரிகையின் ஆக்கமொன்றிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகளை விண்ணப்பதாரர்கள் தனது மொழிபெயர்ப்பு மொழி மூலத்திற்கேற்றவாறு தெரிவுசெய்யப்படும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்.

(i) தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு

(ii) ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு

(iii) ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு

100 புள்ளிகள் - 03 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள்

* இப்பரீட்சையில் சித்தியெய்துவதற்கு விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாத்தாளிலும் நூற்றுக்கு நாற்பது (40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

04. விண்ணப்பதாரர்களின் கையெழுத்துக்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

05. (i) விண்ணப்பப்படிவங்கள் : நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரரால் நிகழ்நிலையில் அனுப்பப்படும் மென்பிரதி மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பப்படும் அச்சுப் பிரதி (print out) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்துக்கு கிடைத்த பின்னர் அந்த மென்பிரதி மற்றும் அச்சுப்பிரதி சரி பார்க்கப்பட்டு (verify) செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவமாக திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டமை/ஏற்றுக்கொள்ளப்படாமை குறித்து கட்டமைப்புக்குள் நுழைவதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபெசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (ஈமெயில்) அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்தற் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுரைப் பத்திரத்தினை (Common Instructions) தரவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும்போது அவ் அறிவுரைகளை முழுமையாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தத் திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்த அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(ii) முதற் தடவை பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அலுவலர்களிடமிருந்து எதுவிதப் பரீட்சைக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னரான தடவைகளில் அலுவலர்களிடமிருந்து ஒரு பாடத்துக்கு ரூபா 250.00 என்றவாறு செலுத்தப்பட வேண்டும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது நிகழ்நிலைக் கட்டமைப்பில் வழங்கப்படும் பின்வரும் கட்டணச் செலுத்துகை முறைமைகளில் மாத்திரமே செலுத்தப்பட வேண்டும்.

(i) ஏதேனுமொரு வங்கிக் கடன் அட்டை ஊடாக (Any Bank Credit Card) ;

(ii) ஏதேனுமொரு வங்கி வரவு அட்டை ஊடாக (Any Bank Debit Card) ;

(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை அட்டை ஊடாக (Bankof Ceylon Online Banking Method);

(iv) ஏதேனுமொரு இலங்கை வங்கிக் கிளை ஊடாக (Bank of Ceylon Slip Payment) ;

(v) தபால் திணைக்களத்தின் ஏதேனுமொரு தபால் நிலையத்துக்கு ஊடாக (Postal Department Payment At Any Post Office).

**குறிப்பு** : மேற்படி முறைமைகளுக்கூடாக கட்டணச் செலுத்துகை மேற்கொள்ளப்படவேண்டிய விதம் தொடர்பிலான அறிவுரைகள் இணையத்தளத்தில் குறித்த தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறிவிக்கப்படும். பரீட்சைக்கான முழுத்தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு கட்டணம் உரிய தொகையை விட குறைவாகவோ கூடுதலாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்படி செலுத்துகை முறைமையின் படி பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும்போது ஏற்படும் கோளாறுகளுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூற மாட்டாது. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப்படவோ அல்லது வேறோர் பரீட்சைக்கு மாற்றவோ இடமளிக்கப்படமாட்டாது.

06. **பரீட்சைக்கு அனுமதித்தல்:-**

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் உள்ள வயதெல்லைக்குள் உள்ள, விண்ணப்பங்கள்

ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன் அது பற்றிய பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியாகி 2-3 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரியாயின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரித்தல் வேண்டும்.

(ii) அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், பரீட்சார்த்தியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சார்த்தி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ் விபரங்களுடன், பெக்ஸ் (தொலைநகல்) ஊடாக அனுமதிப் பத்திரத்தின் பிரதியை துரிதமாக பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் உள்ள பெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணபத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதாயின் அப்பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணபத்தை தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டு என்பனவற்றினை தயார்படுத்திக் கொள்வது பிரயோசனமாகும்.

(iii) ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் வெவ்வேறாக அனுமதி அட்டையுடன் நேர சூசியும் அனுப்பி வைக்கப்படும்.

(iv) இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும், பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அவ்விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக வேண்டி ஏற்படும்.

(v) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதனூடாக ஒரு விண்ணப்பதாரி அப்பரீட்சையில் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

07. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்குதல் வேண்டும். பிரயாணச் செலவுகள் செலத்தப்படமாட்டாது.

08. பரீட்சார்த்திகள் தாம் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இரு காதுளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவு பெற்று வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு காரணத்தினால் மறுப்புத் தெரிவிக்கப்படின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். ஆனாலும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தவறும் பரீட்சார்த்திகளுக்கு பெறுபேறுகள் வழங்கப்படமாட்டாது.

09. **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல்** : பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அத்தோடு பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகளாக குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

*11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழி ரீதியான பதங்களுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் மற்றும் இணக்கமின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவானதாகும்.*

எஸ். ஆலோகபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2023, ஓகத்து 29.

*09-200*

---

*சுகாதார அமைச்சு*

**மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2023 ஆம் ஆண்டு**

*சுகாதார அமைச்சின் மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2023.09.15 ஆந் திகதி முதல் 2023.10.18 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.*

**கவனிக்க வேண்டியவை :**

*1.1 ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். 2019 மற்றும் 2020 ஆகிய இரண்டு வருடங்களிலும் க. பொ. த. (உ. தர) பரீட்சையில் சித்தியடைந்து இருந்தாலும் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்ட வருடத்திற்காக விண்ணப்பிக்க முடியும். இரண்டு வருடங்களுக்காகவும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக்கூடாது. அவ்வாறின்றி இரண்டு வருடங்களிலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.*

*1.2 கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பாக அவதானம் செலுத்தும் போது, ஒரு மாணவர் அரசாங்கத்தின் இலவசக் கல்விச் சலுகையின் கீழ் பல்வேறு அரச நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள் பலவற்றில் இணைவதால், தகுதியுடைய பல மாணவர்களுக்கு இதுபோன்ற ஒரு வாய்ப்புக்கூட கிடைக்காமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. இது தவிர இந்த நிலை காரணமாக அரசாங்கத்தின் பணம் வீண் விரையமாகி வருவதுடன், பாடநெறியின் இறுதியில் எதிர்பார்த்த எண்ணிக்கையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில் வல்லுனர்களின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் திட்டமிட்ட இலக்குகளை அடைய முடியாதுள்ளது. எனவே, மேற்படி நிலமையைக் குறைப்பதற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தையாவது வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 5 இல் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் 5.1 முதல் 5.5 வரையிலான துணைப் பந்திகளில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதியற்ற ஒருவர் இதற்காக விண்ணப்பித்தல் கூடாது. எவ்வாறாயினும், அத்தகைய தகுதியற்றவர்கள் இதற்கு விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால், வர்த்தமானி அறிவித்தலின் துணைப் பந்தி 6.3 இன்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.*

*1.3 கடந்த ஆட்சேர்ப்புகளில், உண்மைக்கு புறம்பான தகவல்கள் (தவறான பரீட்சை ஆண்டுகள், பாடங்கள், பெறப்பட்ட மதிப்பெண்கள் போன்றவை) உள்ளிட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், சில விண்ணப்பதாரர்கள் பொய்யான தகவல்களை உள்ளிட்டு தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்பட்டமையும் அதானிக்க முடிந்தது. இது ஒரு பாரிய தவறாகும். எனவே, எந்தவொரு விண்ணப்பதாரரும் தாம் சமர்ப்பிக்கும் இணையவழி விண்ணப்பத்தில் தவறான தகவல்களை உள்ளிடக்கூடாது. தவறான தகவல்களை உள்ளிட்டு சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் என்பதுடன், அரசாங்க சேவைக்கு இணைய முடியாதவர்களின் கருப்புப் பட்டியலில் அவர்களின் பெயர்கள் சேர்க்கப்படும்.*

*1.4 ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முதலில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக படித்துப் புரிந்து கொண்டு, இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியானவரா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலின் 7.2 பந்தியின்படி, எந்தவொரு இலங்கை வங்கிக்கிளையில் 1,000.00 பணத்தை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு, 9.4, 9.5 மற்றும் 9.6 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தயார்செய்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.*

02. **கற்கை நெறிக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

| க.பொ.த. (சா. தர) தகைமை | க.பொ.த. (உ. தர) தகைமை | பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட விடயங்கள் |
|---|---|---|
| சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். | 2019 ஆம் ஆண்டில் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டில் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டில் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டில் (புதிய பாடத்திட்டம்) அல்லது ஏதாவதொரு ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (உ. தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவிற்குரிய உயிரியல், இராசயனவியல், விவசாயவியல், பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)<br>அல்லது<br>2019 ஆம் ஆண்டில் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டில் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டில் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டில் (புதிய பாடத்திட்டம்) ஏதாவதொரு ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (உ.தர) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவிற்குரிய இணைந்த கணிதம், இராசயனவியல், பௌதீகவியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) | முழு நேர கற்கை நெறியான இதன் காலம் 03 வருடங்கள் ஆகும்.<br><br>2023.10.18 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.<br>உயரம் 04 அடி 10 அங்குலத்திற்கு (147.3 cm) குறையாதிருத்தல்.<br>திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.<br>ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும். |

**அட்டவணை இலக்கம் 01**

03. **கற்கை நெறிக்கு தெரிவு செய்யும் முறை :**

3.1. மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பதற்கான 2013.11.19 ஆந் திகதிய 1837/8 எனும் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தாதியர் சேவைக்கான சேவைப்பிரமாணக்குறிப்பு மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து மாணவர் தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். (ஆண் விண்ணப்பதாரிகளின் ஆட்சேர்ப்பானது, தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளின் கீழ் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.)

3.2. நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் சனத்தொகையின் அடிப்படையில், சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

3.3. அதன் பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாவட்டத்திலும் இருந்து 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டில் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டில் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில், அந்த ஒவ்வொரு பரீட்சையிலும் விண்ணப்பித்து தேவையான குறைந்தபட்ச கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு உரிய மாவட்டத்திலும் இருந்து அந்த ஒவ்வொரு பரீட்சையிலும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.4. அதன் பின்னர் ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை அந்த பரீட்சையில் உயிரியல் மற்றும் பௌதீக விஞ்ஞானம் பாடத்துறையின் கீழ் இந்த கற்கைநெறிக்கு விண்ணப்பித்த குறைந்த கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மொத்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொரு பரீட்சையிலும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.5. அவ்வாறு ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் (2019 ஆம் ஆண்டின் - (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆண்டில் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டில் (புதிய பாடத்திட்டம்) ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்பட்டு அந்த எண்ணிக்கையில் 5% ஆண் விண்ணப்பதாரிகளையும், 95% பெண் விண்ணப்பதாரிகளையும் உள்ளடக்கியதாக ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் மாவட்டத்தின் அதிகூடிய Z மதிப்பெண்களைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் கற்கை நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

04. **தகுதிகள் :**

**அனைத்து விண்ணப்பதாரர்களும் :**

4.1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

4.2. விண்ணப்பதாரர்கள் நன்னடத்தை உடையவராகவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

4.3. தாம் விண்ணப்பிக்கும் மாவட்டம் வதிவிட மாவட்டமாகக் கருதப்படுவதற்கு, விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதியான 2023.10.18 ஆந் திகதிக்கு கிட்டிய 03 வருடங்கள் தொடர்ந்து அந்த மாவட்டத்தில் வசித்திருக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து 03 வருடங்களாக வதிவிட காலத்தை நிரூபிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் வதிவிட மாவட்டமாக அவர்கள் விண்ணப்பித்த மாவட்டத்தை வழங்க முடியாது என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களின் முந்தைய வதிவிட காலங்களை கருத்தில் கொண்டு, விண்ணப்பதாரர் அடுத்ததாக நீண்ட காலங்கள் வசித்த மாவட்டம் விண்ணப்பதாரருக்கான வதிவிட மாவட்டமாக நேர்முகப் பரீட்சை சபையினால் தீர்மானிக்கப்படும். இதற்குத் தேவையான ஆவணங்களை நேர்முக சபையிடம் விண்ணப்பதாரர்கள் உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு** :
விண்ணப்பதாரர் ஒருவரின் தகப்பன் அல்லது தாய் அரச, மாகாண அரச சேவையில் அல்லது மாகாண அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையிலுள்ள காரணத்தால் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் கிட்டிய 03 வருட வதிவை அவரினால் உறுதி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமரப்பிக்கப்பட்டால் அது தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும்.

05. **கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது இணைவதற்கு தகுதியற்றவர்கள்.-**

5.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நடாத்தப்படும் அரசாங்க பல்கலைக்கழகம்/ அரசாங்க பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க. பொ. த. (உ. தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக "அரசாங்க இலவசக் கல்விச் சலுகைகள்" இன் கீழ், உள்ளக மாணவராகப் பதிவு செய்தவர்கள்/கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

5.2. தேசிய கல்வியியல் கல்லூரியொன்றில் க. பொ. த. (உ. தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

5.3. சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு ஏதாவது அரச நிறுவனம் அல்லது க. பொ. த. (உ. தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முழுநேர கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/கற்கையை தொடர்பவர்கள்.

5.4. மேலே 5.1, 5.2 மற்றும் 5.3 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகு, அவர்கள் தங்கள் பதிவை இரத்து செய்தாலும், அவர்கள் இதற்காக விண்ணப்பிக்க/ இணைவதற்கு தகுதி பெறமாட்டார்கள். மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகும்/ நேர்முகப் பரீட்சை நடாத்திய பிறகும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்குரிய கற்கைகளுக்கு பதிவு செய்து பின்னர் அந்த பதிவை இரத்து செய்தாலும், அவர்களும் கற்கை நெறியில் இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள்.

5.5. திருமணம் பதிவு செய்யப்பட்ட அல்லது விவாகரத்து செய்த நபர்கள்.

*06.* **ஏனைய விடயங்கள்.-**

*6.1.* நீங்கள் யாதேனுமோர் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவராக இருந்தால், அந்தப் பட்டம் செயற்பாட்டுத் திகதியானது (Effective Date) இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத் திகதிக்கு அதாவது 2023.09.15 இற்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

*6.2.* மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பினும் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் இந்த கற்கை நெறிக்கு இணைப்பதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருப்பினும் நீங்கள் போதியளவு Z பெறுமானத்தை பெறாத விடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திராவிடின், எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவராக கருதப்படு வீர்கள்.

*6.3.* மேலே 5.1, 5.2 மற்றும் 5.3 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் முழு நேர கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள்/கற்றுக்கொண்டிருப்பவர்கள் அல்லது 5.4 மற்றும் 5.5 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியற்றவர்கள் இதற்காக விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால் உரிய கற்கையிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசாங்கத்தினால் அவருக்காக செலவிடப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும்.

*6.4.* கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய சகல அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித் தினமான 2023.10.18 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*07.* **விண்ணப்பிக்கும் முறை.-**

*7.1.* மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல் படித்தைப் பார்க்கவும். (விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும்.)

*7.2.* விண்ணப்பதாரிகள் 1,000.00 ரூபா பணத்தை, இலங்கை வங்கி, தப்ரோபேன், இலக்கம் 7041318 எனும் சுகாதார அமைச்சின் சுகாதார செயலாளரின் கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணத்தை எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் ஊடாகவும் செலுத்த முடியும். இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித் தர மாட்டாது என்பதுடன் பிறிதொரு பரீட்சையொன்றுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. நீங்கள் மேற்படி கட்டணம் செலுத்தியமைக்கான ஆதாரம் (பற்றுச்சீட்டு) இனை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதன் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

*7.3.* இவ்வாறு தங்களினால் வெற்றிகரமாக பதிவேற்றப்பட்ட (UPLOAD) விண்ணப்பத்தின் பிரதிகளை தபாலில் இவ்வமைச்சிற்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் விண்ணப்பம் பதிவேற்றம் செய்த பின்னர் கிடைக்கப்பெறும் 5 இலக்கங்களைக் கொண்ட குறியீட்டு இலக்கத்தை அச்சுப் பிரதிகளை பின்னர் பெற்றுக் கொள்வதற்கு வசதிக்காக பாதுகாப்பாக வைத்திருக்கவும். அத்துடன் அச்சுப் பிரதியொன்றை (PRINT OUT) எடுத்து அதில் உரிய இடத்தில் உங்களது கையொப்பத்தை இட்டு 8.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் கையொப்பத்தை சான்றுறுதி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் கொண்டு வரவேண்டும்.

**குறிப்பு :**

இக்கற்கைக்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் மட்டும் அது தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளை பெற வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 9.00 தொடக்கம் 4.00 வரையான காலத்தில் சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் 0112340007 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். hrcodmoh@gmail.com என்ற மின்ஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். (இதன்போது எப்போதும் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் உங்களை தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது அவசியமாகும்.)

சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஏனைய விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.)

08. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-**

8.1. இலங்கை நிருவாக சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர்/இலங்கை கல்விச் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர்/இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர்/அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான் ஒருவர்/சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த சம்பளம் 512,148.00 ரூபாவிற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8.2. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

09. **நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள்.-**

9.1. நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய இணையத்தள விண்ணப்பங்களுக்கு அமைய குறைந்த கல்வித் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் Z பெறுமதிக்கு அமைய தயாரிக்கப்பட்ட முதன்மைப் பட்டியலொன்றை அடிப்படையாகக்கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் இந்த பதவிக்குரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் (நேர்முக சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய) விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஏதாவது சான்றிதழ்கள்/ ஆவணங்களை அன்றைய தினத்தில் சமர்ப்பிக்க முடியாதவிடத்து நேர்முகப் பரீட்சை சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த சான்றிதழ்கள்/ஆவணங்களை நேர்முகப் பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் இந்த அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II இற்கு நேரில் கொண்டு வந்த கையளிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்வதற்கு தவறும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த தேர்வுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

9.2. இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (8.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுறுதி செய்யப்பட்ட).

9.3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

9.4. க.பொ.த (உ.தர) பரீட்சை பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட).

9.5. க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேற்றுச்சான்றிதழ் (பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட).

9.6. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் உள்நாட்டு சாரதி அனுமதிப்பத்திரம்.

9.7. 1,000.00 ரூபா பணத்தை வங்கிக்கு செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு.

9.8. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவு தொடர்பான சான்றிதழ்.

9.9. மாணவர் பணி காட்டி (பாடசாலை விடுகைப் பத்திரம் - கல்வி B 59 பொது படிவம்)

9.10. மேலே 5.5 துணைப் பந்தியில் குறிப்பிப்பட்டுள்ளவாறு விவாகமாகாதவர் அல்லது விவாகரத்து பெற்றவர் அல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்கான சமாதான நீதவான் முன்னிலையில் 50.00 ரூபா முத்திரையில் கையொப்பமிடப்பட்ட உறுதிமொழி.

9.11. மேலே 5 ஆவது பந்தியின் 5.1 முதல் 5.4 வரையான துணைப் பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ளபடி தகுதியற்றவர் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான உறுதிமொழி.

**குறிப்பு**.- (அ) மேலே 9.2 தொடக்கம் 9.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்படப்பிரதிகள் நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது கொண்டு வர வேண்டும்.

(ஆ) பயிற்சிக் கல்லூரிகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியத்திற்கு ஏற்ப பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

(ஈ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் http://www.health.gov.lk எனது இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

(உ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் உரிய காலத்தில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்களினால் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு உரிய தினத்தில் சமுகமளித்து உரிய தினத்தில் பதிவு செய்யாத விண்ணப்பதாரிகளினால் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கற்கை நெறியில் இணைவதற்காக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் எக்காரணத்திற்காகவும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

10. **பயிற்சித் திட்டம்**.-

10.1. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இந்த கற்கை நெறியை தொடர்வதற்கு பயிற்சிக் கல்லூரிக்கு உள்வாங்கப்படுவார்கள். கற்கை நெறிக்கான காலம் மற்றும் கற்க வேண்டிய மொழி என்பன இலக்கம் I அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10.2. பயிற்சிக்காக இணைக்கப்படும் பயிலுநர்கள் பயிற்சிக் கல்லூரியில் வலுவில் உள்ள விதிமுறைகளுக்கும் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

10.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலை மற்றும் நடத்தை என்பன திருத்திகரமாக இல்லாவிட்டால் அல்லது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளை மீறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது உண்மைக்கு புறம்பானவை அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்ட ஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

10.4. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப ஆவணம் V இன் நியதிகளுக்கு அமைய மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

10.5. பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்த பட்சம் பத்து வருடங்கள் (10) மத்திய/மாகாண அரசாங்க சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். மேலே 10.3 இன் படி, பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறும் மாணவர்கள் பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்பட்டு இந்த காலத்தினுள் அவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணைக்குரிய பணத்தை அவரினால் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

10.6. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப திகதியில் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணமாகாமல் இருப்பது கட்டாயமானதாகும்.

11. **சேவையில் ஈடுபடும் நியதிகள்**.-

11.1. பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்காது. எனினும் பயிற்சியை நிறைவு செய்யும் தினமாகும் போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிட பட்டியலுக்கு அமைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் எஞ்சிய வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப் பரீட்சையில் சித்தியடையும் பயிலுநர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு கட்டுப்படல் வேண்டும்.

11.2. நியமனம் பெற்றவர்களுக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் விதிமுறைகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

11.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளிட வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்னர் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என கண்டறியப்பட்டால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு கருப்பு பட்டியலில் அவருடைய பெயர் உள்வாங்கப்படும். மேலும், பயிற்சிக் காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.4. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்கள்.

11.5. மேற்படி இணைக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்ட திட்டங்களுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அரசாங்க சேவைகள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும், சேவைப் பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளுக்கும், அரச நிதி ஒழுங்கு விதிகளுக்கும், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் மற்றும் அவை தொடர்பாக காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திருத்தங்களுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

11.6. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிக் கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்பட்டில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் அறவிடப்படும்.

11.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான எவ்வித உரிமைகளும் இல்லை.

11.8. பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், அது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

எஸ். ஜனக்க ஸ்ரீ சந்திரகுப்த,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10,
2023.08.31.

09-220

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

சிறைச்சாலைகள் திணைக்களம்

### சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற சிறைக்காவலர் பதவிகளுக்கு (ஆண்/ பெண்) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இப்பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவது இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பொலிஸ் மற்றும் ஏனைய காவல் சேவை வகுதிகளைச் சேர்ந்த சிறைக்காவலர் பதவிக்காகும்.

02. எழுத்து மூலமான பரீட்சை: இப்பரீட்சை பின்வரும் 02 வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும்.

I. பொது உளச்சார்பு
II. பொது அறிவு

**கவனத்திற்கொள்ளவும் :** எழுத்து மூலமான பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் இந்த அறிவித்தலின் 13 ஆம் பிரிவின் (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உடல்சார் தகைமைக்கான பரிசோதனை மற்றும் தகைமையை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எனவே மேற்படி பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

02. **பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சையை நடாத்தல் :**

இப்பரீட்சை 2023, திசெம்பர் மாதம் அட்டவணை - 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாடு முழுவதிலும் அமைந்துள்ள பிரதான நகரங்களில் நடைபெறும். மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தை, இலக்கத்துடன் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும், யாதாயினுமொரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை தாபிக்கப் போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருக்காத சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தில் இரண்டாம் தெரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நகரம் அல்லது அண்மித்த வேறொரு நகரத்தில் தாபிக்கப்படும். பரீட்சை நிலையத்திற்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள். உத்தேச சகல நகரங்களிலும் அல்லது கூடுதலான நகரங்களில் பரீட்சை நிலையங்களைத் தாபிக்க போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத பட்சத்தில் குறித்த பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்த பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கை மேற்கொள்வார்.

**அட்டவணை 1**

| அட்டவணை இலக்கம் 05 | |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

03. நியமனம் செய்யப்படும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 347 ஆகும். (சிறைக்காவலர் (ஆண்) - 300, சிறைக்காவலர் (பெண்) - 47 இறுதி வெற்றிடத்திற்கு அல்லது ஒரு சில வெற்றிடங்களுக்கு சமமான புள்ளிகளை பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விஞ்சி இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மேற்படி வெற்றிடங்களின் எண்ணக்கையை நிரப்புவது தொடர்பான நடவடிக்கைமுறை விதிகள் தொகுப்பின் 80 ஆவது பிரிவுக்கு அமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய தீர்மானிக்கப்படும். நியமனத்தை அமுல்படுத்தும் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

04. **சேவை நிபந்தனைகள்** :

1.1 அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும், 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகளுக்கும் உட்பட்டு விண்ணப்பதாரர் ஒருவர் மேற்படி பதவியின் சிறைக்காவலர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

1.2 இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், விதவை/அநாதை ஓய்வூதியத்திட்டத்திற்கு விதவை/ தபுதாரர்/ அநாதை ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அடிக்கடி நிர்ணயிக்கப்படுகின்றவாறு நீங்கள் அதற்கான பங்களிப்புத் தொகைகளைச் செலுத்தல் வேண்டும்.

1.3 இந்நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

1.4 அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கமைய மற்றும் அதற்கான விளைவாய்ந்தன்மைவாய்ந்த சுற்றறிக்கைகளுக்கமைய உரிய அரச கரும மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும்.

1.5 தமக்கு பொறுப்பபளிக்கப்படுகின்ற பதவியின் கடமைகளை குறித்த திகதியில் பொறுப்பேற்றுக் கொள்ளத் தவறும் மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்டதொரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட பிரதேசமொன்றில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ள நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகளின் நியமனத்தை இரத்துச்செய்வதற்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயத்திற்கு தத்துவமுண்டு. சிறைக்காவலர் பதவிக்கு நியமனம் பெறுபவர்கள் நியமனம் பெற்று முதல் 05 வருட காலப்பகுதியில் நிரந்தர வசிப்பிடப் பிரதேசத்திற்கு வெளியே சிறைச்சாலைகளில் திருமணமாகாதவர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களில் தங்கியிருந்து சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.

05. **சம்பள அளவுத் திட்டம்**.- இப்பதவிக்கு அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 எனும் சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைய RS - 1-2016 (1 ஆம் சம்பள நிலை) சம்பள வகுதி உரித்தாகும். மேற்படி சம்பள வகுதிக்கு உரித்தான சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறாகும். ரூபா 29,540-7 ×300 - 27 ×370- ரூபா 41,630.00 (மாதாந்தம்)

(2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 29,540.00 இற்கு இசைவான ஆரம்ப சம்பள நிலையில் வைத்து சம்பளம் செலுத்தப்படும்.)

06. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்** :

(அ)

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராகவும், சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும். இதனை பொலிஸ் விடுவிப்பு அறிக்கை மூலம் உறுதி செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(iii) நற்பெயர் சம்பந்தமான தவறு தொடர்பில் ஏதேனுமொரு நீதிமன்றத்தினால் தவறாளியாக்கப்படுவது மேற்படி பதவிக்கு நியமனம் பெறுவதற்கு பூரணமான தகுதி இன்மையாக இருக்கும் ;

(iv) ஆகக் குறைந்த உயரம் 5 அடி 4 அங்குலம் (ஆண்) ;

(v) ஆகக் குறைந்த உயரம் 5 அடி 2 அங்குலம் (பெண்) ;

(vi) நெஞ்சு மூச்சு உள்வாங்காத நிலையில் 32 அங்குலத்திற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். (பெண்களுக்கு ஏற்புடையதன்று) ;

(vii) விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துச் செய்தவர்கள் மற்றும் விதவைகள் இதன்போது விவாகமானவர்களாகக் கருதப்படுவார்கள்.) ;

(ஆ) **கல்வித் தகைமைகள் :**
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மற்றும் கணிதம் உள்ளடங்களாக ஆறு (06) பாடங்களில் ஏதேனும் இரண்டு (02) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

(இ) **வயது :**

- 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய, 2005.10.16 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1993.10.16 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதியைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க தகைமை பெறுவார்கள்.)

(ஈ) இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

07. **பரீட்சைக் கட்டணம்**: பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகம் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்திற்கும் பணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை, அதன் ஒரு ஓரத்தை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணத்தை திருப்பிச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றல் செய்யவோ இடமளிக்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

08. விண்ணப்பிக்கும் முறை :

8.1 விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவானதாக இருத்தல் வேண்டும். இது கடதாசியின் இருப்பக்கத்தையும் பயன்படுத்தி 8.27" × 11.69" (A4) அளவான கடதாசியில் தயார் செய்யப்பட்டு விண்ணப்பதாரி தமது சுயகையெழுத்தைப் பயன்படுத்தி பூர்த்தி செய்தல் வேண்டும். இதற்காக கணினி மூலம் தயார் செய்யப்பட்ட அல்லது தட்டெழுத்து செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தையும் பயன்படுத்திக் கொள்ள முடியும். தலைப்பு இலக்கம் 1-05 வரை முதலாம் பக்கத்திலும், தலைப்பு இலக்கம் 06 முதல் 11 வரை இரண்டாம் பக்கத்திலும், ஏனைய தலைப்புக்களை நான்காம் பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் தயார் செய்துகொள்ளல் வேண்டும், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத மற்றும் பூரணமற்றதாக தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் முன் அறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும். (குறித்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.) மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம். பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையவாறு உள்ளதா என்பதை விண்ணப்பதாரி சரிபார்த்தல் வேண்டும் என்றும், அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

8.2 விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்த்துள்ள மொழியில் தயார் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8.3 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2023.10.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தாபன பரீட்சைகள் ஒழுங்குபடுத்தல் கிளை, இலங்கை பரீடசைகள் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சிறைக்காவலாளி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2023)'' என்று

குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை தயார் செய்துகொள்ளும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழிமூலமான விண்ணப்பப்படிவங்களில், சிங்கள மொழிக்கு மேலதிகமாக, ஆங்கில மொழி மூலமும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழிமூலமும் குறிப்பிடுவது அவசியமாகும்.

8.4 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் கருதுகோளின் அடிப்படையில், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி, உரிய திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் முறையாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை விநியோகிப்பார். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டமையானது விண்ணப்பதாரி குறித்த பதவிக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று கருதப்படக்கூடாது விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தகைமைகள் உள்ளதா என்பதை பரிசோதிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை என்பது வெளிப்படுத்தப்படுமாயின் குறித்த நபரின் பரீட்சை விண்ணப்பதாரி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும்.

8.5 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், பகிரங்க நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒரு பதவியை வகிக்கின்ற அலுவலர் ஒருவர் அல்லது அரசாங்க சேவையின் நிரந்தர பதவியொன்றை வகிக்கின்ற பதவி நிலை அலுவலர் ஒருவர் அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையைச் சேர்ந்த ஒருவராயின் நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறான அலுவலர் ஒருவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தற்போது சேவையாற்றும் நிறுவனத்திலிருந்து விடுவிக்கப்பட முடியும் என்பதை நிறுவனத் தலைவர் உறுதி செய்திருத்தல் வேண்டும்.

8.6 உரிய திகதிக்கு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதுள்ள மற்றும் பூரணமற்ற நிலமையிலுள்ள விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவுப்பும் இன்றி நிராகரிக்கப்படும். முறையாக விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யாமை காரணமாக இடம்பெறுகின்ற இழப்புக்களை விண்ணப்பதாரிகள் தாங்கிக் கொள்ளல் வேண்டும். தபாலில் அனுப்பும் போது விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

8.7 விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை பற்றி அறிவிப்புச் செய்யப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன், அது பற்றிக் குறிப்பிட்டு, அறிவித்தலொன்று பத்திரிகைகள் மற்றும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 3 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லை எனின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். இதன் போது உங்களின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணபித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். தாங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசத்தை சேர்ந்த விண்ணப்பதாரி எனின், உங்களின் மேற்படி விபரங்களை உள்ளடக்கிய கடிதத்தை பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு, மேற்படி அறிவித்தல் காணப்படும் பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது உகந்ததாகும். இதன் போது தேவையான தகவல்களை உறுதி செய்வதற்காக உங்கள் வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டை தயார் செய்து வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

09. **பரீட்சைக்குத் தோற்றுதல்:**

(அ) விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சை அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்டு முதல் முறை குறித்த பரீட்சை மண்டபத்திற்கு வருகை தரும் தினத்தில், அதனை பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டவணை இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை

இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் ஆக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கும் பரீட்சை விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுகின்றார்கள். மேற்படி சட்டங்கள், விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் அவர் உட்பட நேரிடும்.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.-** பரீட்சை விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக பின்வரும் யாதாயினுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சை விண்ணப்பதாரர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த சந்தர்ப்பம் முதல் பரீட்சை நிறைவடைந்த அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரர்களை இனங்காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காது இருத்தல் வேண்டும்.

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:** விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்டங்கள், விதிகளுக்கு அமைய யாராயினும் விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவர் என்பது வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பதாரி அந்தஸ்து இரத்துச் செய்யப்பட முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் உண்மைக்கு முரணானது என்பதை அறிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளமை தெரியவரும் பட்சத்தில், அல்லது யாதாயினுமொரு முக்கியமான விடயம் அவரினால் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருப்பின் அவரின் நியமனத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழிமூலம் :**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.
(ஆ) தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடும் பரீட்சைக்கான மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்ய விண்ணப்பதாரருக்கு இடமளிக்கப்படமாட்டாது.

13. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

(1) **எழுத்து மூலமான பரீட்சை :**

இந்த அறிவித்தலின் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய 02 வினாத்தாள்களைக் கொண்டதாக எழுத்து மூலம் பரீட்சை நடைபெறும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தி பெறுவதற்கு ஆகக் குறைந்தது 40% ஆன புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பாடங்கள் : 1. பொது உளச்சார்பு
2. பொது அறிவு

- **எழுத்து மூலமான பரீட்சைக்கான பாடவிதானம் :**

(அ) பொது உளச்சார்பு .- நேரம் 01 மணித்தியாலம். மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும். எண்ணியல், மொழியியல் மற்றும் உருவக கட்டமைப்புக்கள் சார்ந்ததாக தர்க்க ரீதியாக சிந்தித்தல், பகுப்பாய்வுசார் சிந்தனை ஆற்றல், தீர்மானம் மேற்கொள்ளும் திறமையை கணிப்பிடுவதற்காக தயார் செய்யப்பட்ட 50 வினாக்களைக் கொண்ட பல்தேர்வு வினாத்தாள் ஆகும்.

(ஆ) பொது அறிவு - நேரம் 02 மணித்தியாலம். மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும். இலங்கையின் அரசியல், கலாசார மற்றும் பொருளாதார சூழல் சார்ந்ததாக முக்கியத்துவம் மிக்க விடயங்களை உள்ளடக்கிய அறிவை பரிசோதிப்பதற்காக தயார் செய்யப்பட்ட 50 வினாக்களைக் கொண்ட பல்தேர்வு வினாப்பத்திரமாகும்.

(2) **உடல்சார் தகுதிக்கான பரிசோதனை:**

காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கு எண்ணிக்கையானோர் எழுத்து மூலமான பரீட்சையில் உச்சளவான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் பெயர்களின் அகர ஒழுங்குவரிசையில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொண்டு மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் உடல்சார் பரிசோதனை எனும் தாக்குப்பிடிக்கும் ஆற்றல் பற்றிய பரிசோதனை நடாத்தப்படும். மேற்படி பரிசோதனை நடைபெறும் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

ஆண் - 1000 மீற்றர் (1 கிலோ மீற்றர்) - 03 நிமிடம் 44 செக்கன் நேரத்திற்குள் ஓடுதல்.
பெண் - 400 மீற்றர் (0.4 கிலோ மீற்றர்) - 02 நிமிடம் 05 செக்கன் நேரத்திற்குள் ஓடுதல்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் உடல்சார் தகைமைக்கான பரிசோதனைக் குழு நியமனம் செய்யப்படும்.

(3) **தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை :**

(i) மேலே இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பற்றிய வரையறைகளுக்கு உட்படுகின்றாரா என்பதை பரிசீலித்துப் பார்ப்பதற்காக தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான தலைப்புக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கைக்குள், புள்ளி வழங்க நேர்முகப் பரீட்சைக்கு குழு நடவடிக்கை மேற்கொள்ளும்.

| புள்ளி வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை | தெரிவு செய்துகொள்ள கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மேலதிகக் கல்விசார் மற்றும் வேறு தகைமைகள் | 25 | ஏற்புடையதன்று |
| தொழில்சார் தகைமைகள் | 15 | |
| விளையாட்டுத் திறமைகள் | 30 | |
| தலைமைத்துவம் மற்றும் சமுதாய சேவைகள் | 25 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்திய திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

(iii) உடல் சார் தகைமைப் பரிசோதனை எனும் தாக்கும் பிடிக்கும் ஆற்றல் பற்றிய பரிசோதனையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் தகைமைகளை மதிப்பீடு செய்யும் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அடிப்படைத் தகைமைகள், தகைமைகளைப் பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். (எழுத்துமூலமான பரீட்சையில் விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகள் இந்த சந்தர்ப்பத்தில் அழைக்கப்படுவதில்லை.)

(iv) தகைமைகளை பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையின் போது ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மீண்டும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் குறித்த விண்ணப்பதாரர்கள்

எழுத்துமூலமான பரீட்சையில் மற்றும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட ஒட்டுமொத்த புள்ளிகளின் கூட்டுத்தொகையின் ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் உச்சளவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் சிறைக்காவலாளி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

**குறிப்பு**: நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதாவது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்வதாகக் கருதப்படமாட்டாது.

❖ யாதாயினும் எண்ணிக்கையிலான வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாதிருப்பதற்கு நியமன அதிகாரிக்கு தத்துவமுண்டு.

❖ இதில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின், அது பற்றி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தீர்மானம் மேற்கொள்வார். சகல விண்ணப்பதாரிகளும் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்டங்கள், விதிகளுக்கு அமைய நவடிக்கை மேற்கொள்வதற்குக் கட்டுப்பட்டுள்ளார்கள்.

❖ இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான உரைகளுக்கு இடையே ஏதேனும் இணங்காமை அல்லது ஒவ்வாமை எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

எச். எம். ரீ. என். உபுல்தெனிய,
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்.

சிறைச்சாலைகள் தலைமையகம்,
இலக்கம் 150, பேஸ்லைன் வீதி,
கொழும்பு - 09,
2023, செத்தெம்பர் 07.

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரிவிண்ணப்பபடிவம்

**சிறைக்காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023**
Open Competitive Examination for the Recruitment to the Post of Prison Guard - 2023

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாவது தெரிவு | | |
| இரண்டாவது தெரிவு | | |

(வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்திக்கு அமைய பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற நகரத்தை எழுத்து மூலமும் மற்றும் உரிய நகரத்தின் இலக்கத்தையும் குறிப்பிடுக.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ☐

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூண்டில் குறிப்பிடுக.)

(இதனைப் பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.)

01. (அ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):-...............................................................................
..........................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :..............................................................
..........................................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதா. : (GUNAWARDHANA, M. G. B. S. K.)

(இ) ..........................................................................................................................

02. (அ) நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்) :
..........................................................................................................................

(ஆ) நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) : ..........................................................................................................
..........................................................................................................................................

03. பால் : ☐

பெண் - 1, ஆண் - 0 (உரிய இலக்கத்தை கூண்டில் குறிப்பிடுக.)

04. தேசிய ஆள் அடையாள அட்டை இல. ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. தொலைபேசி இலக்கம் (நடமாடும்): ☐☐☐☐☐☐☐☐☐☐

(நிலையான) : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது: ☐

திருமணமாகாதவர் - 1

திருமணமானவர் - 2 (உரிய இலக்கத்தை கூண்டில் குறிப்பிடுக.)

07. பிறந்த திகதி :-

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

08. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது (2023.10.16) :

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

09. பிரசாவுரிமை (பரம்பரை மூலமா/பதிவு செய்ததன் மூலமா என்பது) : ..................................

10. உடல் சார் அளவைகள்:

உயரம் : அடி :............... அங்குலம் : ..............

நெஞ்சு : அங்குலம் : .................

(பெண் விண்ணப்பதாரிகள் உயரத்தை மாத்திரம் குறிப்பிடல் வேண்டும்.)

11. கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சா.த.) பரீட்சை

(i) பரீட்சை ஆண்டு : ................

(ii) பரீட்சை இல. : .................

(iii) பரீட்சை பெறுபேறு :-

க.பொ.த. (உ.த.) பரீட்சை

(i) பரீட்சை ஆண்டு : ................

(ii) பரீட்சை இல. : .................

(iii) பரீட்சை பெறுபேறு :-

| பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

12. வேறு தகைமைகள் : ..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

13. யாதாயினுமொரு தவறு தொடர்பில் தாங்கள் நீதிமன்றத்தில் குள்ளவாளியாக்கப்பட்டிருப்பின் அது பற்றிய சகல விபரங்களும் :
..........................................................................................................................................
..........................................................................................................................................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்தல் :

i. செலுத்தப்பட்ட தொகை : ......................................................
ii. செலுத்தப்பட்ட அலுவலகம் : ..................................................
iii. செலுத்தப்பட்ட திகதி : ............................................................
iv. பற்றுச்சீட்டு இலக்கம் : ..............................................................

15. **விண்ணப்பத்தாரியின் உறுதியுரை :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் அமைய உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............. ஆம் இலக்க ................ ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கின்றேன். மேலும், பரீட்சையின் சட்டங்கள், விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கும், இந்தப் பரீட்சை பற்றிய நிபந்தனைகளுக்கு அமைய நான் தகுதியற்றவர் என்பது தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது அதனை நடாத்தும் போது அல்லது அதன் பின்னர் எனது பரீட்சை அபேட்சகர் அந்தஸ்தை இரத்துச் செய்ய மேற்கொள்ளப்படும் ஏதேனும் தீர்மானத்திற்கு நான் இணங்குகின்றேன். அவ்வாறே, பரீட்சையை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

.....................................................
விண்ணப்பத்தாரியின் கையொப்பம்.

திகதி : .............................

16. **கையொப்பத்தை சான்றுப்படுத்தல்:** (வர்த்தமானி அறிவித்தலின் 8.5 இற்கமைய இருத்தல் வேண்டும்)

இந் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி............................................................................ என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ............ ஆந் திகதி தமது கையொப்பத்தை பதிவு செய்தார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

.......................................................
கையொப்பத்தை சான்றுப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

பெயர் : ....................................................
பதவி : ......................................................
முகவரி : ........................................
திகதி: .......................................................
(பதவி முத்திரை மூலம் சான்றுப்படுத்துக.)

17. திணைக்களத் தலைவர் அல்லது நிறுவனத் தலைவரின் உறுதிரையு (ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

திரு./ திருமதி/ செல்வி ........................................................... என்பவர் இத்திணைக்களத்தில் / நிறுவனத்தில் சேவையாற்றி வருகின்றார் என்றும் , அவரின் கடமை மற்றும் நடத்தை திருப்திகரமானது என்றும் இப்பதவிக்குரிய அறிவித்தலில் இப்பதவிக்கு

விண்ணப்பிப்பதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் தெரிவிக்கின்றேன்.

(ஏற்புடையதாகாத சொற்களை கீறிவிடுக.)

.............................................................

திணைக்களத் தலைவரின்/நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.

பெயர் :....................................................

பதவி :.....................................................

முகவரி :.......................................

திகதி:- ........................................................

(பதவி முத்திரை மூலம் சான்றுப்படுத்துக.)

09-253

---

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## கிராம உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022/2023

01. கிராம உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளின் படி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் 2023 திசெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பதோடு, அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் என இத்தால் அறிவித்தல் விடுக்கிறது. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் எமது சேவைகள் (Our services) கீழ் Online Application (Recruitment/E.B.Exams) முகப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை இணையவழி (Online) ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். முதற் தடவை பரீட்சைக்குத் தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதற்குப் பின்னரான தடவைகளில் தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் தாம் தோற்றும் தடவையை சரியாக தேர்ந்தெடுக்க வேண்டும். விண்ணப்பங்களை இணையவழி ஊடாக அனுப்பியதன் பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியில் மற்றைய தகவல்களையும் விண்ணப்பதாரியின் உறுதியுரை, ஒப்பத்தை சான்றுப்படுத்தல் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுரை போன்ற பகுதிகளை முழுமைப்படுத்தி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கிராம உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022/2023" எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2023 ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதியாகும்.

குறிப்பு - விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியை கட்டாயமாக தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு, அது தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்கள் தாமதப்படுத்தலால் ஏற்பட முடியுமான நட்டங்கள் விண்ணப்பதாரியினால் ஏற்கப்படல் வேண்டும். (பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பத்தின் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.)

02. இந்தப் பரீட்சை கிராம உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களுக்காக பின்வரும் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் மாத்திரம் நடைபெறும். அந்த நகரங்களுக்கு உரித்தான நகர இலக்கம் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளதோடு, விண்ணப்பப்படிவத்தில் குறித்த தலைப்பு இந்நகரம் மற்றும் நகர இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பித்த நகரம் / நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்துக்கு போதுமானளவு பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை காணப்படாதவிடத்து அப்பரீட்சை நிலையத்தை இரத்துச் செய்து விட்டு, அதற்கு கிட்டிய பரீட்சை நிலையத்துக்கு குறித்த விண்ணப்பதாரிகள் அனுப்பப்படுவார்கள்.

மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

அட்டவணை இலக்கம் 01 - பரீட்சை நடைபெறும் நகாரங்களும் நகர இலக்கமும்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

03. (i) இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு சகல விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள்.

04. தகைமைகள் - 2010.09.29 ஆந் திகதி முதல் நடைமுறைப்படும் கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறைப் படி கிராம உத்தியோகத்தர் சேவையின் I ஆந் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

05. பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தமது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

06. (i) விண்ணப்பப்படிவங்கள் - இணையவழி (Online) பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பிய மென்பிரதி மற்றும் பதிவுத்தபாலில் அனுப்பிய அச்சிடப்பட்ட பிரதி ( Printout) ஆகிய இரண்டையும் பரீட்சை திணைக்களத்திற்கு கிடைத்ததன் பின்னர், அம் மென்பிரதி மற்றும் அச்சிடப்பட்ட பிரதியை உறுதிப்படுத்துகை (Verify) செய்யப்படுவதுடன், செல்லுபடியாகும் விண்ணப்பங்களாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என அமைப்பினுள் பிரவேசிக்கப் பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (ஈ- மெயில்) முகவரியின் மூலம் அறிவிக்கப்படும். இணையவழி மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள பொதுவான அறிவுரைப் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது இவ்வறிவுரைகளை கண்டிப்பாகப் பின்பற்றவும்.

விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருதப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(ii) போலியான தகவல்களுக்கான தண்டனை - விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச் சந்தர்ப்பத்திலும், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களினால் பரீட்சைக் கட்டணங்கள் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்துவரும் அமர்வுகளில் உத்தியோகத்தர்களினால் ஒரு பாடத்திற்கு ரூபா 250.00 என்ற விதத்தில் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது இணையவழி முறையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டண முறைமைகளின்படி மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்:

i. வங்கிக் கடன் அட்டை (Bank Credit Card) ;
ii. இணையவழி கட்டண வசதிகளை செயற்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு பற்றுமதி அட்டை மூலம் (Bank Debit Card with Internet Bank Facility) ;
iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறையின் மூலம் (Bank of Ceylon Online Banking Method) ;
iv. இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Bank of Ceylon Teller Slip Payment).

*குறிப்பு* - மேற்படி முறைகளின் மூலம் கட்டண செலுத்துகை இடம்பெறும் விதம் பற்றிய அறிவுறுத்தல் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனையின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுந்தகவல் (SMS)மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்குரிய முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கட்டணச் செலுத்தல் முறை ஊடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் பிழைகள் தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது. பரீட்சைக்காக செலுத்திய பணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது அத்தோடு மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவும் மாட்டாது.

07. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, திருத்தமாக பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடைபெறும் நேர அட்டவணையின் பிரதியுடன் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி அறிவித்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியப்படுத்துதல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்வசம் வைத்துக் கொண்டு, பரீட்சையின் பெயர், தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிக்குமாறு அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்படி தங்களது விபரங்களுடன் ஒரு கோரிக்கைக் கடிதம், பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் என்பவற்றை தொலைநகல் ஊடாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் பயனளிக்கக் கூடும்.

*குறிப்பு* - விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவராக கருதப்பட மாட்டார்.

08. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள், அவர்களுக்கு கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறும் என்பதோடு குறித்த சேவையினுள் சேர்வதற்கு தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் இப்பரீட்சையில் தோற்ற இந்த உத்தியோகத்தர்களுக்கு முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குள் உள்வந்த பரீட்சார்த்திகள் அவர்கள் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழிகளில் ஒன்றில் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. உத்தியோகத்தர்கள் தமது தற்றுணிபின் பேரில் வெவ்வேறான தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் வேறுவேறாக தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது நாற்பதினை (40%) இனை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். சகல பாடங்களிலும் சித்தியெய்து பரீட்சையைப் பூர்த்தி செய்யும் ஆண்டில் பரீட்சை நடைபெற்ற இறுதித் திகதி இந்த வினைனத்திறன்காண் தடைதாண்டலை சித்தியெய்திய திகதியாக கருதப்படும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதோடு, பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்கள் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களிற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச் சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்படல் வேண்டும் என்பதோடு, இந்த பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் தொகுக்கப்படாத, இந்த பாடத்திற்கு உரியதாக ஏதேனும் ஒரு விடயம் தொடர்பிலாக இருந்தாலும் எனது தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

15. பரீட்சை நடைமுறை :- பின்வரும் பாடங்கள் உள்ளடங்கலான எழுத்து மூலப்பரீட்சை ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்.

அட்டவணை இலக்கம் 02 : பரீட்சைக்காக தோற்றும் பாடங்கள் மற்றும் உரித்தான ஏனைய விபரங்கள்

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| அலுவலக நடைமுறை, அரசாங்க சேவையின் பொதுவான நடத்தை மற்றும் ஒழுக்காற்று | 1 | 100 | 01 ½ மணித்தியாலம் | 40% |
| விடயம் சார்ந்த ஆய்வு மற்றும் தொழில்முறை அறிவு | 2 | 100 | 01 ½ மணித்தியாலம் | 40% |

15.1 அலுவலக நடைமுறை, அரச சேவையின் பொதுவான நடத்தை மற்றும் ஒழுக்கம் ( பாட இலக்கம் - 01)

(அ) அலுவலக முறைமை

அரசாங்க அலுவலகங்களில் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் பிரயோகிக்கப்படும் அலுவலக முறை தொடர்பிலான அடிப்படை அறிவு மற்றும் அவ் அறிவினை பிரயோக அடிப்படையில் பயன்படுத்தும் நிலையை அளவிட எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் பொதுவான நடத்தைகள் மற்றும் ஒழுக்கம்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சட்டவிதிகளின் படி ஒழுக்காற்று அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள விதம், சேவையை முடிவுறுத்தல், ஓய்வு பெறச் செய்தலுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் பொதுவான நடத்தை மற்றும் ஒழுக்காற்று நடைமுறைக்கு உரித்தான XLVII மற்றும் XLVIII ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தற்காலத்தில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை தொடர்பிலான அறிவு மற்றும் புரிதல் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

*15.1.1 வினாப் பத்திரம் தொடர்பான விபரம்*

இவ்வினாப்பத்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| I ஆம் பாகம் | - | பல்தேர்வு வினாப் பத்திரம். காலம் 30 நிமிடங்கள் ஆகும் . (25 புள்ளிகள்) |
| II ஆம் பாகம் | - | ஐந்து வினாக்களைக் கொண்ட பகுதியளவு கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப் பத்திரமாகும். ஐந்து வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும். 01 மணித்தியாலம் ஆகும். (75 புள்ளிகள்) |

*15.2 விடயம் சார்ந்த ஆய்வுகள் மற்றும் தொழில்சார் அறிவு - (பாட இலக்கம் - 02)*

*கிராம உத்தியோகத்தர்களுக்குரிய பல்வேறு கட்டளைச் சட்டங்கள் மற்றும் அமைச்சு, திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் பிற சட்டரீதியான அரசாங்க நிறுவனங்கள் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பிலான அறிவினைப் பரீட்சித்துப் பார்க்கப்படும் என்பதோடு, அப்பாடங்களுக்குரிய நிகழ்வுகள் தொடர்பிலான விடய ஆய்வும் உள்ளடங்கியுள்ளது.*

*15.2.1வினாப் பத்திரம் தொடர்பான விபரம்*

இவ்வினாப்பத்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| I ஆம் பாகம் | - | பல்தேர்வு வினாப் பத்திரம். காலம் 30 நிமிடங்கள் ஆகும் . (25 புள்ளிகள்) |
| II ஆம் பாகம் | - | ஐந்து வினாக்களைக் கொண்ட பகுதியளவு கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப் பத்திரமாகும். ஐந்து வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும். 01மணித்தியாலம் ஆகும். (75 புள்ளிகள்) |

கே. டீ. என். ரஞ்சித் அசோக,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05,
2023, செத்தெம்பர் 07.

09-325/1

---

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## கிராம உத்தியோகத்தர் தரம் II இன் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022/2023

01. *கிராம உத்தியோகத்தர் தரம் II இன் உத்தியோகத்தர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளின் படி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் 2023 திசெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பதோடு அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது என இத்தால் அறிவித்தல் விடுக்கிறது. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் எமது சேவைகளின் (Our services) கீழ் Online Application (Recruitment/E.B.Exams) முகப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை இணையவழி (Online) மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். முதற் தடவை பரீட்சைக்குத் தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதற்குப் பின்னரான தடவைகளில் தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் தாம் தோற்றும் தடவையை சரியாக தேர்ந்தெடுக்க வேண்டும். விண்ணப்பங்களை இணையவழி ஊடாக*

அனுப்பியதன் பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியில் ஏனைய தகவல்களையும் விண்ணப்பதாரியின் உறுதியுரை, ஒப்பத்தை சான்றுப்படுத்தல் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுரை போன்ற பகுதிகளை முழுமைப்படுத்தி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கிராம உத்தியோகத்தர் தரம் II இன் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022/2023" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2023, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதியாகும்.

குறிப்பு - விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியை கட்டாயமாக தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு, அது தபாலில் காணாமல் போதல் தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்கள் தாமதப்படுத்தலால் ஏற்பட முடியுமான நட்டங்கள் விண்ணப்பதாரியினால் ஏற்கப்படல் வேண்டும். (பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பத்தின் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.)

02. இந்தப் பரீட்சை கிராம உத்தியோகத்தர் தரம் II இன் உத்தியோகத்தர்களுக்காக பின்வரும் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் மாத்திரம் நடைபெறும். அந்த நகரங்களுக்கு உரித்தான நகர இலக்கம் கீழ்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பப்படிவத்தில் குறித்த தலைப்பு இந்நகரம் மற்றும் நகர இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பித்த நகரம் / நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்துக்கு போதுமானளவு பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை காணப்படாதவிடத்து அப்பரீட்சை நிலையத்தை இரத்துச் செய்து, அதற்கு கிட்டிய பரீட்சை நிலையத்துக்கு குறித்த விண்ணப்பதாரிகள் அனுப்பப்படுவார்கள்.

மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாத விடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

அட்டவணை இலக்கம் 01: பரீட்சை நடைபெறும் நகாரங்களும் நகர இலக்கமும்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

03. (i) இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள்.

04. தகைமைகள் - 2010.09.29 ஆந் திகதி முதல் நடைமுறைப்படும் கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறைப் படி கிராம உத்தியோகத்தர் சேவையின் II ஆந் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

05. பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தமது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

06. (i) விண்ணப்பப்படிவங்கள் - இணையவழி (Online) பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பிய மென்பிரதி மற்றும் பதிவுத்தபாலில் அனுப்பிய அச்சிடப்பட்ட பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர், அம் மென்பிரதி மற்றும் அச்சிடப்பட்ட பிரதி உறுதிப்படுத்துகை (Verify) செய்யப்படுவதுடன், செல்லுபடியாகும்விண்ணப்பங்களாகதிணைக்களத்தினால்ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என அமைப்பினுள் பிரவேசிக்கப் பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள பொதுவான அறிவுரைப் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது இவ்வறிவுரைகளை கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருதப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(ii) போலியான தகவல்களுக்கான தண்டனை - விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச் சந்தர்ப்பத்திலும், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களினால் பரீட்சைக் கட்டணங்கள் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்துவரும் அமர்வுகளில் உத்தியோகத்தர்களினால் ஒரு பாடத்திற்கு ரூபா. 250.00 என்ற விகிதத்தில் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது இணையவழி முறையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டண முறைமைகளின் படி மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்:

i. வங்கிக் கடன் அட்டை (Bank Credit Card);
ii. இணையவழி கட்டண வசதிகள் செயற்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு பற்றுமதி அட்டை மூலம் (Bank Debit Card with Internet Bank Facility);
iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறை மூலம் (Bank of Ceylon Online Banking Method);
vi. இலங்கை வங்கிக் கிளை மூலம் (Bank of Ceylon Teller Slip Payment).

*குறிப்பு* - மேற்படி முறைகளின் மூலம் கட்டண செலுத்துகை இடம்பெறும் விதம் பற்றிய அறிவுறுத்தல் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனையின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுந்தகவல் (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்குரிய முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கட்டணச் செலுத்தல் முறை ஊடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் பிழைகள் தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது. பரீட்சைக்காக செலுத்திய பணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது அத்தோடு மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவும் மாட்டாது.

07. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, திருத்தமாக பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடைபெறும் நேர அட்டவணையின் பிரதியுடன் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி அறிவித்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாது விடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியப்படுத்துதல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்வசம் வைத்துக் கொண்டு, பரீட்சையின் பெயர், தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிக்குமாறு அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்படி தங்களது விபரங்களுடன் ஒரு கோரிக்கைக் கடிதம் பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தொலைநகல் ஊடாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் பயனளிக்கக் கூடும்.

*குறிப்பு* - விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவராக கருதப்பட மாட்டார்.

08. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சைச் சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

09. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள், அவர்களுக்கு கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறும் என்பதோடு குறித்த சேவையினுள் சேர்வதற்கு தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் இப்பரீட்சையில் தோற்ற இந்த உத்தியோகத்தர்களுக்கு முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குள் உள்வந்த பரீட்சார்த்திகள் அவர்கள் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழிகளில் ஒன்றில் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. உத்தியோகத்தர்கள் தமது தற்றுணிவின் பேரில் வெவ்வேறான தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் வேறுவேறாக தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது நாற்பது வீதத்தினை (40%) அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். சகல பாடங்களிலும் சித்தியெய்து பரீட்சையைப் பூர்த்தி செய்யும் ஆண்டில் பரீட்சை நடைபெற்ற இறுதித் திகதி இந்த வினைத்திறன் தடைதாண்டலை சித்தியெய்திய திகதியாகக் கருதப்படும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதோடு, பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களிற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்படல் வேண்டும் என்பதோடு, இந்த பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் தொகுக்கப்படாத, இந்த பாடத்திற்கு உரியதாக ஏதேனும் ஒரு விடயம் தொடர்பிலாக இருந்தாலும் எனது தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

15. பரீட்சை நடைமுறை : பின்வரும் பாடங்கள் உள்ளடங்களான எழுத்து மூலப்பரீட்சை ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்.

அட்டவணை இலக்கம் 02 : பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் மற்றும் உரித்தான ஏனைய விபரங்கள்

| | பாடம் | புள்ளிகள் | நேரம் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை ஒழுங்கு விதிகள் | 100 | 01 1/2 மணித்தியாலம் | 1 |
| 2. | விடயம் சார்ந்த ஆய்வு மற்றும் தொழில்முறை அறிவு | 100 | 01 1/2 மணித்தியாலம் | 2 |

15.1 தாபன விதிக்கோவை மற்றும் நடைமுறை ஒழுங்குவிதிகள்

(அ) அலுவலக முறைமை

அரசாங்க அலுவலகங்களில் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் பிரயோகிக்கப்படும் அலுவலக முறைமை தொடர்பிலான அடிப்படை அறிவு மற்றும் அவ்வறிவினை பிரயோக அடிப்படையில் பயன்படுத்தும் நிலை அளவிட எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) தாபனச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை ஒழுங்கு விதிகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதி மற்றும் தாபன விதிக்கோவை VII, IX, XI, XII, XIV, XV, XVI, XVII, XXI, XXII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII ஆம் அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தற்காலம் பயன்படுத்தப்படும் பொது நிருவாக மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை பற்றிய அறிவு மற்றும் புரிதல் பரீட்சிக்கப்படும்.

15.1.1 வினாப் பத்திரம் தொடர்பான விபரம்

இவ் வினாப்பத்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| I ஆம் பாகம் | - | பல்தேர்வு வினாப் பத்திரமாகும். காலம் 30 நிமிடங்கள் (25 புள்ளிகள்) |
| II ஆம் பாகம் | - | ஐந்து வினாக்களைக் கொண்ட பகுதியளவு கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப் பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். காலம் 01 மணித்தியாலம் (75 புள்ளிகள்) |

15.2 விடயம் சார்ந்த ஆய்வுகள் மற்றும் தொழில்சார் அறிவு

கிராம உத்தியோகத்தர்களுக்குரிய பல்வேறு கட்டளைச் சட்டங்கள் மற்றும் அமைச்சு, திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் பிற சட்டரீதியான அரச நிறுவனங்கள் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பிலான அறிவினைப் பரீட்சித்துப் பார்க்கப்படும் என்பதோடு, அப்பாடங்களுக்குரிய நிகழ்வுகள் தொடர்பிலான விடய ஆய்வும் உள்ளடங்கியுள்ளது.

15.2.1 வினாப்பத்திரம் தொடர்பான விபரம்

இவ்வினாப்பத்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| I ஆம் பாகம் | - | பல்தேர்வு வினாப் பத்திரமாகும். காலம் 30 நிமிடங்களாகும். (25 புள்ளிகள்) |
| II ஆம் பாகம் | - | மூன்று வினாக்களைக் கொண்ட பகுதியளவு கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப் பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். காலம் 01 மணித்தியாலமாகும். (75 புள்ளிகள்) |

கே. டீ. என். ரஞ்சித் அசோக,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
“நில மெதுர”, எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05,
2023, செத்தெம்பர் 07.

09-325/2

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## கிராம உத்தியோகத்தர் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்கான கணினித் திறனை பரீட்சித்துப் பார்க்கும் எழுத்துப் பரீட்சை மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022/2023

01. கிராம உத்தியோகத்தர் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளின் படி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் கணினி ஆற்றலைப் பரீட்சித்துப் பார்க்கும் எழுத்துப் பரீட்சையை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் 2023, திசெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பதோடு, அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் என இத்தால் அறிவித்தல் விடுக்கிறது. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் எமது சேவைகள் (Our services) கீழ் Online Application (Recruitment/E.B.Exams) முகப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதோடு விண்ணப்பங்களை இணையவழி (Online) ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதற்குப் பின்னரான தடவைகளில் தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் தாம் தோற்றும் தடவையை சரியாக தேர்ந்தெடுத்தல் வேண்டும். விண்ணப்பங்களை இணையவழி ஊடாக அனுப்பியதன் பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியில் ஏனைய தகவல்களையும் விண்ணப்பதாரியின் உறுதியுரை, ஒப்பத்தை சான்றுப்படுத்தல் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுரை போன்ற பகுதிகளை முழுமைப்படுத்தி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கிராம உத்தியோகத்தர் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்கான கணினித் திறனை பரீட்சித்துப் பார்க்கும் எழுத்துப் பரீட்சை மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022/2023" என தெளிவாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2023, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதியாகும்.

குறிப்பு - விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியை கட்டாயமாக தபாலில் அனுப்ப வேண்டும் என்பதோடு, அது தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதால் ஏற்பட முடியுமான நட்டங்கள் விண்ணப்பதாரியினால் ஏற்கப்படல் வேண்டும். (பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பத்தின் பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாகும்.)

02. இந்தப் பரீட்சை கிராம உத்தியோகத்தர் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்கான பின்வரும் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் மாத்திரம் நடைபெறும். அந்த நகரங்களுக்கு உரித்தான நகர இலக்கம் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளதோடு, விண்ணப்பப்படிவத்தில் குறித்த தலைப்பில் இந்நகரம் மற்றும் நகர இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பித்த நகரம் / நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்துக்கு போதுமானளவு பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை காணப்படாதவிடத்து அப்பரீட்சை நிலையத்தை இரத்துச் செய்து விட்டு, அதற்கு கிட்டிய பரீட்சை நிலையத்துக்கு குறித்த விண்ணப்பதாரிகள் அனுப்பப்படுவார்கள்.

மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாத விடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

அட்டவணை இலக்கம் 01: பரீட்சை நடைபெறும் நகரங்களும் நகர இலக்கமும்

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

03. (i) இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளானவை வர்த்தமானி அறிவித்தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள்.

04. தகைமைகள் - 2010.09.29 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறைப் படி கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

05. பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தமது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

06. (i) விண்ணப்பப்படிவங்கள் - இணையவழி (Online) மூலம் கோரப்படும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பிய மென்பிரதி மற்றும் பதிவுத்தபாலில் அனுப்பிய அச்சிடப்பட்ட பிரதி ( Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர், அம் மென்பிரதி மற்றும் அச்சிடப்பட்ட பிரதியை உறுதிப்படுத்துகை (Verify) செய்யப்படுவதுடன், செல்லுபடியாகும் விண்ணப்பங்களாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக்கொள்ளப்படவில்லையா என அமைப்பினுள் பிரவேசிக்கப் பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (ஈ- மெயில்) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள பொதுவான அறிவுரைப் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது இவ்வறிவுரைகளை கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருதப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(ii) போலியான தகவல்களுக்கான தண்டனை - விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச் சந்தர்ப்பத்திலும், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களினால் பரீட்சைக் கட்டணங்கள் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அடுத்துவரும் அமர்வுகளில் உத்தியோகத்தர்களினால் ஒரு பாடத்திற்கு ரூபா 250.00 என்ற விதத்தில் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது இணையவழி முறையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டண முறைமைகளின்படி மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்:

i. வங்கிக் கடன் அட்டை (Bank Credit Card) ;
ii. இணையவழி கட்டண வசதிகள் செயற்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு பற்றுமதி அட்டை மூலம் (Bank Debit Card with Internet Bank Facility);
iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறை மூலம் (Bank of Ceylon Online Banking Method);
iv. இலங்கை வங்கிக் கிளை மூலம் (Bank of Ceylon Teller Slip Payment).

குறிப்பு - மேற்படி முறைகளின் மூலம் கட்டண செலுத்துகை இடம்பெறும் விதம் பற்றிய அறிவுறுத்தல் இணையத் தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனையின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுந்தகவல் (SMS)அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்குரிய முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கட்டணச் செலுத்தல் முறை ஊடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் பிழைகள் தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது. பரீட்சைக்காக செலுத்திய பணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது அத்தோடு மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவும் மாட்டாது.

07. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, திருத்தமாக பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடைபெறும் நேர அட்டவணைப் பிரதியுடன் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி அறிவித்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத விடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியப்படுத்துதல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதியை தம்வசம் வைத்துக் கொண்டு, பரீட்சையின் பெயர், தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றைக் குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிக்குமாறு அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்படி தங்களது விபரங்களுடன் ஒரு கோரிக்கைக் கடிதம் பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தொலைநகல் ஊடாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் பயனளிக்கக் கூடும்.

குறிப்பு - விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவராக கருதப்பட மாட்டார்.

08. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சைச் சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள், அவர்களுக்கு கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறும் என்பதோடு குறித்த சேவையினுள் சேர்வதற்கு தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்ற இந்த உத்தியோகத்தர்களால் முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குள் உள்வந்த பரீட்சார்த்திகள் அவர்கள் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. உத்தியோகத்தர்கள் தமது தற்றுணிபின் பேரில் வெவ்வேறான தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் வேறுவேறாக தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது நூற்றுக்கு நாற்பதினை (40%) அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். சகல பாடங்களிலும் சித்தியெய்தி பரீட்சையைப் பூர்த்தி செய்யும் ஆண்டில் பரீட்சை நடைபெற்ற இறுதித் திகதி இந்த வினைத்திறன்காண் தடைதாண்டலை சித்தியெய்திய திகதியாகக் கருதப்படும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதோடு, பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களிற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்படல் வேண்டும் என்பதோடு, இந்த பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் தொகுக்கப்படாத, இந்த பாடத்திற்கு உரியதாக ஏதேனும் ஒரு விடயம் தொடர்பிலாக இருந்தாலும் எனது தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

15. பரீட்சை நடைமுறை : பின்வரும் பாடங்கள் உள்ளடங்கலான எழுத்துமூலப் பரீட்சை ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்.

அட்டவணை இலக்கம் 02 : பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் மற்றும் உரித்தான ஏனைய விபரங்கள்

| | பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|---|
| 01 | அலுவலக முறைமை மற்றும் கணக்குகள் | 01 | 100 | 02 மணித்தியாலம் |
| 02 | விடயம் சார்ந்த தொழில்முறை அறிவு | 02 | 100 | 02 மணித்தியாலம் |
| 03 | கணினிப் பரீட்சை | 03 | 100 | 01 ½ மணித்தியாலம் |

15.1 அலுவலக முறைமை மற்றும் கணக்குகள் ( பாட இலக்கம் - 01)

(அ) அலுவலக முறைமை

கிராம உத்தியோகத்தர் அலுவலகம் மற்றும் அரசு அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் பற்றிய அடிப்படை அறிவை நடைமுறையில் பயன்படுத்தும் திறனை பரீட்சித்தல் மற்றும் கடமை ஆவணங்களை நன்கு புரிந்துகொள்ளல் மற்றும் தெளிவான மற்றும் சுருக்கமான குறிப்புகள் மூலம் ஒரு குறிப்பிட்ட முறையில் தங்கள் கருத்துக்களை / அவதானிப்புகளை முன்வைக்கும் திறனைப் பரீட்சித்தல் மற்றும் விடயம் சார்ந்த விபரங்கள் தொடர்பில் அறிக்கையை வரைவிடும் இயலுமையும் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

(ஆ) கணக்குகள்

கிராம உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுக்கு உரித்தான மற்றும் அரச அலுவலகங்களில் பிரயோகிக்கப்படும் அடிப்படைக் கணக்குகள் மற்றும் கணக்கு முறைமையையும், பணக் கட்டுப்பாட்டுப் பதிவேடுகளின் பணிகள், பெறுகை தொடர்பான புரிதலையும் அறிவையும் அளவிட எதிர்பார்க்கப்படுகிறது.

15.1.1 வினாப் பத்திரம் தொடர்பான விபரம்

| | | |
|---|---|---|
| I ஆம் பாகம் | - | குறுகிய விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களைக் கொண்டது. வினாத் தாளிலே விடையளித்தல் வேண்டும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்) |
| II ஆம் பாகம் | - | மூன்று வினாக்களைக் கொண்ட கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப் பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்) |

15.2 விடயம் சார்ந்த தொழில்முறை அறிவு - (பாட இலக்கம் 02)

கிராம உத்தியோகத்தர்களுக்குரிய பல்வேறு கட்டளைச் சட்டங்கள் மற்றும் அமைச்சு, திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் பிற சட்டரீதியான அரச நிறுவனங்கள் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பிலான அறிவினைப் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

15.2.1 வினாப்பத்திரம் தொடர்பான விபரம்

| | | |
|---|---|---|
| I ஆம் பாகம் | - | சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களைக் கொண்டது. வினாத்தாளிலே விடையளித்தல் வேண்டும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்) |
| II ஆம் பாகம் | - | மூன்று வினாக்களைக் கொண்ட கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப் பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்) |

*15.3 கணினிப் பரீட்சை (பாட இலக்கம் - 03)*

விண்ணப்பதாரிக்கு பின்வரும் திறமைகள் இருக்கின்றதா என்பது பற்றி ஆராய்தல் இப்பரீட்சிப்பின் நோக்கமாகும்.

| | | |
|---|---|---|
| I. | தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை எண்ணக்கரு | |
| II. | செயற்பாட்டு தொகுதி | |
| III. | கோப்பு முகாமைத்துவம் | |
| IV. | சொல் செயலாக்கம் | i. அடிப்படை திறன்கள் திரைக்கு அறிமுகமாதல், உரைத் தொகுப்பு, உரைகளை ஒரே தொடரில் அமைத்தல் எழுத்துரு வகை மற்றும் துணைப் பந்திகள், பந்திகளின் வரிகளுக்கு இடையிலான இடைவெளி மாற்றங்கள், டெப் அமைப்பு (Tab Settings) ஒரு உரையைத் தேடல் மற்றும் மீளமைத்தல்<br>ii. எழுத்துப்பிழை மற்றும் இலக்கணப் பிழைகள் ஒத்த சொற்கள்,<br>iii. நெடுவரிசை இடல், பக்கங்களின் அமைப்பு,<br>iv. ஆவணங்களை அச்சிடல், அட்டவணை அமைத்தல், ஒழுங்கு வரிசைப்படுத்துதல்,<br>v. கோப்பு முகாமைத்துவம்<br>vi. ஒரு ஆவணத்தை பல முகவரிகளுக்கு அனுப்பும் வகையில் தயாரித்தல்,<br>vii. மைக்ரோ பயன்பாடு |
| V. | விரிதாள்கள் | i. அடிப்படைத் தகைமைகள்,<br>ii. வடிவமைத்தல் (Formating),<br>iii. தொகுத்தமைத்தல்,<br>iv. வரிகள் மற்றும் இடைவெளிகள், புதிய செருகல்கள் மற்றும் நீக்குதல்கள்,<br>v. தரவுகளை ஒழுங்குமுறையில் அமைத்தல்,<br>vi. வரைபடங்களைத் தயாரித்தல்,<br>vii. அச்சிடல்,<br>viii. @ செயற்பாடு (@ Functions)<br>ix. மைக்ரோ பயன்பாடு கோப்பு முகாமைத்துவம் |
| VI. | தரவுத் தளம் | i. அறிமுகம் அடிப்படைத் தகுதிகள்,<br>ii. தரவுத் தள உருவாக்கம் மற்றும் பயன்பாடு,<br>iii. படிவங்கள்,<br>iv. இணைந்த படிவங்கள் பொப் அப் படிவங்கள் ( Popup forms)<br>v. வினவல்கள் ( queries),<br>vi. ஒழுங்குமுறையில் அமைத்தல்,<br>vii. அறிக்கைகளைப் பெறுதல்,<br>viii. மைக்ரோ பயன்பாடு |
| VII. | முன்வைப்புகள் / படக் குறிப்புகள் | i. அடிப்படைத் தகைமைகள், தொகுத்தமைத்தல், வடிவமைத்தல்,<br>ii. திட்டங்களை அமைத்தல்,<br>iii. பதிலீட்டு கிளிப்புகளை வரைதல் மற்றும் வரைபடங்களை உள்ளீடு செய்தல்,<br>iv. படவில்லைகளை மாற்றுதல் மற்றும் அனிமேஷன் விளக்கக்காட்சி கருவிகளின் பயன்பாடு,<br>v. குரு (Master) காட்சி வில்லை அமைத்தல்,<br>vi. காட்சிவில்லைகளை அச்சிடல் மற்றும் குறிப்புகள் |
| VIII. | இணையத்தள வலையமைப்பு | i. இணையத்தளத்தை அறிமுகம் செய்தல் உலகளாவிய வலையமைப்பு<br>ii. பாதைகளை கண்டறியும் விதம்,<br>iii. பயன்பாட்டு இணையத்தளம் |
| IX. | மின்னஞ்சல் (E-Mail) | i. அறிமுகம் அடிப்படைத் தகைமைகள், மின்னஞ்சல்களைப் பெற்றுக் கொள்ளல்<br>ii. மின்னஞ்சல் அனுப்புதல் மற்றும் அவற்றுக்கு பதிலளித்தல்.<br>iii. இணைப்புக்களை சேர்த்தல், முகவரியைக் கண்டறிய சுருக்க பெயர் பயன்பாடு,<br>iv. செய்தித் தொகுப்பு |

*15.3.1 வினாப் பத்திரம் தொடர்பான விபரம்*

இவ்வினாப் பத்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளதோடு, பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள I மற்றும் II ஆம் பகுதிகள் இரண்டுக்குமுரிய நேரம் 1 ½ மணித்தியாலமாகும்.

| | | |
|---|---|---|
| I ஆம் பாகம் | - | பல்தேர்வு/சுருக்க விடையினை எதிர்பார்க்கும் 40 வினாக்களைக் கொண்டுள்ளது. (40 புள்ளிகள்) |
| II ஆம் பாகம் | - | பகுதியளவு கட்டமைக்கப்பட்ட 05 வினாக்களைக் கொண்டது. (60 புள்ளிகள்) |

*15.3.2 கணினிப் பாட எழுத்துப் பரீட்சையில் இருந்து விடுவிப்புப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள்*

(அ) கணினிப் பாட எழுத்துப் பரீட்சையில் இருந்து விடுவிப்புப் பெறுவதற்கான தகைமைகளைப் பெறும் பாடநெறிகள் மற்றும் சான்றிதழ் பத்திரங்கள்

2010.09.29 ஆந் திகதிய கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறையின் இணைப்பு 02 இன் 06 ஆம் பந்தியின் படி தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் கணினிச் செயற்பாட்டுப் பத்திரம் அல்லது கணினிச் செயற்பாட்டுப் பத்திரத்துக்குச் சமனான அல்லது அதற்கு மேற்பட்ட தரத்துடைய இரண்டாம் நிலைக் கற்கை அல்லது தொழில்முறைக் கற்கை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து வழங்கப்பட்ட கணினி தொடர்பான சான்றிதழ் பத்திரத்தைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் இந்த கணினி ஆற்றலைப் பரீட்சித்துப் பார்க்கும் எழுத்துப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். மேலும், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் கணினிச் செயலி உதவியாளர் (NVQ மட்டம் 3) இற்கான சான்றிதழைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் இந்த கணினி ஆற்றலை பரீட்சிக்கும் எழுத்துப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

(அ) கணினிப் பாட எழுத்துப் பரீட்சையில் இருந்து விடுவிப்புப் பெறுவதற்கான தகைமைகளைப் பெறும் பட்டப் பாடநெறிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பட்டத்தைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் கிராம உத்தியோகத்தர் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

1) கணினியியல்/தகவல் தொழில்நுட்பப் பட்டம்

அல்லது

2) கணினியில் /தகவல் தொழில்நுட்பத்தை பாடமொன்றாக கற்றுள்ள பட்டம்

அல்லது

3) முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு உரித்தான கணினிப் பரீட்சையின் பாடத் திட்டத்தை உள்ளடக்கும் பாடங்களுடன் கூடிய பட்டம்

கே. டீ. என். ரஞ்சித் அசோக,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05,
2023, செத்தெம்பர் 07.

9-325/3

## திருத்தம்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2023**

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியை திருத்தம் செய்தல்**

01. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களின் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவாகத்தினால் 2023 ஆம் ஆண்டு கொழும்பில் நடாத்துவது தொடர்பில் வெளியிடப்பட்ட இலக்கம் 2,346 - 2023, ஓகத்து மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை - 2023.08.18 எனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி, நியமன அதிகாரி என்ற வகையில் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2023.09.22 வரை நீடிக்கப்பட்டுள்ளதை இத்தால் அறியத்தருகின்றேன்.

02. மேற்படி வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை தொடர்பில் இலக்கம் 2,346 - 2023, ஓகத்து மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை - 2023.08.18 எனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

03. இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு எழுமிடத்து சிங்கள மொழி மேலோங்கும்.

ஐ. எஸ். எச். ஜே. இலுக்பிட்டிய,
குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
"சுஹுருபாய",
பத்தரமுல்லை,
2023, செத்தெம்பர் 13.

09-340

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.